
T-UN-524

# கபிலக் கல்



ஆசிரியர் :

மலையமான், ஆர். துரை, B. Sc., B. Ed., (M. Sc.,)

மணம்பூண்டி,

வெளியீடு:

பெண்ணைப் பதிப்பகம், திருக்கோவலூர்.

சார்பாக ப. மதிவாணன் M. A.,

விற்பனை நிலையம் :

ராசி தனிப்பயிற்சி நிறுவனம்,

7, கடைவீதி, திருக்கோவலூர்.

விலை 50 காசுகள்

உ

முருகா

# அணிந்துரை.

நட்பு என்ற பண்பின் வடிவாக திகழ்ந்தவர் கபிலர். 'சாதலின் இன்னாததில்லை' என்பர் திருவள்ளுவர். யாருக்குமே உயிர் இனிக்கும். இந்த இனி உயிர் வாழ்வை தன் நண்பன் வேள்பாரிக்காக தியாகயஞ் செய்த கபிலருடைய பண்பின் திறம் பல வடிவில் பாராட்டுதற்குரியது.

அன்பர் R. துரை B. Sc., B. Ed., என்னும் அன்பர் கபிலரைப்பற்றி நன்கு ஆராய்ந்து, சுவையாக இந்நூலை எழுதியுள்ளார். நல்ல ஆராய்ச்சி நூல். இதனை ஏனேரும் படித்துப் பயன் பெறுவார்களாக!

**நேரிசை வெண்பா**

தூயதமி ழாய்ந்த துரையென்னும் சொற்செல்வன்
ஆய கபிலர்தம் ஆய்வுநூல் - நேயஉல
கெல்லாம் உணர இனியதமி ழாயீந்தான்
பல்லாண்டு வாழ்க பணைத்து.

அன்பன்,

**கிருபானந்தவாரி.**

# கபிலக் கல்

தமிழ் தழைத்தோங்கிய காலமான கடைச்சங்கக் காலத்தில், மிகவும் பெருமைக்குரிய, புகழுக்குரிய பெரும்புலவர் பலருள் கபிலர் என்பார் குறிப்பிடத்தக்கவர். அவரைப் பற்றி மாறோக்கத்து நப்பசலையார் என்னும் பெண்பாற் புலவர், புறம் 126 ஆம் பாடலில்

''புலனழுக் கற்ற வந்த ணாளன்'' என்றும்; புறம் 174 ஆம் பாடலில் ''பொய்யா நாவிற் கபிலன்'' என்றும் சிறப்பித்துக் கூறுகிறார்.

மேலும் பெருங் குன்றூர்க் கிழார் என்னும் புலவர் பதிற்றுப் பத்து 85 ஆம் பாடலில்,

''அரசவை பணிய வறம்புரிந்து வயங்கிய
மறம்புரி கொற்கை வயங்குசெந் நாவின்
உவலைக் கூராக் கவலையி னெஞ்சின்
னனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்''

என்று கபிலரைப் பற்றி எடுத்துரைக்கின்றார். பொருந்திலிளங் கீரனார் என்பார் புறம் 53 ஆம் பாடலில்,

''வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்'' என்று கபிலரின் புகழுக்கு அணி செய்கிறார்.

சங்கக் காலப் புலவர்கள் மட்டுமல்லாமல், பிற்கால சோழர் களின், இராசராச சோழன் கால கல்வெட்டொன்றில் ''தெய்வக் கவிதை செஞ்சொற் கபிலன்'' என்றுக் கபிலர் போற்றப்படுகிறார்.

இவ்வாறுகப் பாராட்டப் பெறும் கபிலர் பிறந்த ஊர், பிறப்புப் பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

''நீதிமா மதூக நீழ னெட்டிலை யிருப்பை யென்றோர்
காதல்கூர் பனுவல் பாடும் கபிலனார் பிறந்த மூதூர்
சோதிசேர் வகுள நீழற் சிலம்பொலி துளங்கக் காட்டும்
வேதநா யகனார் வாழும் வியன்றிரு வாத வூரால்''

என்ற தமிழ் நாவலர் சரிதையில் கண்ட பாடலால் திருவாதவூரில் பிறந்தவர் என்பது ஒரு சாரார் கருத்து.

ஆதி, பகவன் என்ற பெற்றோருக்கு திருவாரூரில் உள்ள மண்டபத்தில் பிறந்த பிள்ளைதான் கபிலர் என்பர். அந்தப் பிள்ளையை அந்தணர் ஒருவர் எடுத்துச் சீராட்டி, கல்வி புகட்டி வளர்த்தமையால் அந்தணர் எனப்பட்டார் என்ற கருத்தும் உண்டு.

''கபில ரதிகமான் காற்குறவர் பாவை
முகிலனைய கூந்தன் முறுவை — நிகரிலா
வள்ளுவ ரவ்வை வயலூற்றுக் — காட்டிலுப்பை
எள்ளி லெழுவ ரிவர்''

என்று ஔவை பாடிய தனிப்பாடலால், கபிலரின் உடன்பிறந்த சகோதரர்கள் அதிகமான், திருக்குறள் பாடிய திருவள்ளுவர் என்றும், உடன் பிறந்த நான்கு சகோதரிகள் குறவர்பாவை, முறுவை, ஔவை, உப்பை என்றும் எழுவர் உறவு பெறப்படுகிறது.

நதிமூலம், ரிஷிமூலம் கேட்கக் கூடாது என்பார்கள். அது போல் கபிலர் பிறப்பு; வளர்ப்பு, நாடு, நகர் எப்படி இருந்தால் என்ன, கபிலர் பிறந்தது, 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் மண்ணில்' சேவை செய்தது தமிழுக்கு! இதை யாரும் மறுக்க இயலா ஒப்பரிய உண்மை.

அரும்பெரும் சரித்திரச் செய்திகளைப் பலரும் வியக்கும் வண்ணம் அன்றையப் பண்பாட்டினையும், அன்றைய சமுதாயத்தினையும் கலந்து ஓவியமாகத் தீட்டிப் பலரும் உணரத் தந்தவர் கபிலர். அவர் வள்ளலையும், மன்னரையும். குறுநிலத் தலைவர்களையும் பாடிப் பரிசில் பெற்று, வாழ்க்கை நடத்தும் முறைமையை ஏற்றவர்.

கபிலர் பெரும் புலவர் என்று நாடறியா முன்னம் மலையமான் நாட்டு காவலனும், கடையெழு வள்ளல்களில் ஒருவனுமான மலையமான் திருமுடிக்காரியிடம் சென்றார். அம்மன்னன் இரவலர்களில், அவரையும் ஒருவராகக் கருதி, வரிசையறியாது பொருள் ஈந்தான். இதனைக் கபிலர் புறம் 121-124 ஆம் பாடல்களில் சித்தரிக்கிறார். கபிலர் பெரும்புகழ் பெற்றுச் சென்றிருப்பின் நிச்சயமாக வரிசையறிந்து இருப்பான். ஆகவே மலையமான் திருமுடிக்காரியிடம் கபிலரின் புகழை நாடு அறியும் முன்பே பாடிப் பரிசுடன் சிறப்புப் பெற்றார்.

பின்னர் பறம்பு மலைத்தலைவனும், கடையெழு வள்ளல்களில் ஒருவனுமான வேள்பாரியிடம் நட்புக் கொண்டு, ஈருடலும் ஓர் உயிராகி, அவரது அவைக்களப் புலவர் என்ற மட்டில் அல்லாது ஆருயிர் நண்பராகச் சிறந்து விளங்கினர். இக்காலகட்டத்தில் பாரியின் மகளிர்கள் அங்கவை, சங்கவையை சோழன் மணக்க எண்ணங் கொண்டிருந்தான். அந்த உறவைப் பாரி உதறியிருக்க வேண்டும். அல்லது காலம் தாழ்த்தி இருக்க வேண்டும். அந்தக்

காரணத்தை மனதிற் கொண்டு அவன் புகழின் மேலுள்ள காழ்ப்பாக புற உலகிற்கு காட்டி, சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மூவரும் பாரியை வெல்லக் கருதி, பறம்புமலையை முற்றுகையிட்டனர். பல நாள் முற்றுகைப்போர் நீடித்தும், பாரியைப் பணிய வைக்க முடியாததால், வஞ்சகப் புகழ்ச்சி அணியாக கபிலர் ''விறலியராக வேடம் தாங்கி, ஆடிப்பாடி, வாருங்கள்'' எனப் பொருள் படப் பாடினார். தன்னையே தருவான் என்றதும், அவ்வண்ணமே பாடி வந்து, பாரியை வெற்றி கண்டார்கள்.

அதன்பின் பாரியின் அருமைப் புதல்விகள் அங்கவை, சங்கவையை அடைக்கலமாகப் பெற்று தன்னுடன் அழைத்துக் கொண்டு, வேள்பாரியை இழந்த கையறு நிலையைப் பலவாறாக, பறம்பு மலையை முன்நிலைப்படுத்தி பாடிவிட்டு, அவ்விரு பெண்களை மணமுடித்தல் வேண்டிப் பறம்புமலையிடம் பிரியா விடைப் பெற்றார்.

விச்சிக்கோன், இருங்கோவேள் என்பவர்களிடம் சென்று, மணம் பேசினார். அழகும், திருவும் வாய்ந்த பாரியின் மகள்களை மணக்க, உள்ளூற விருப்பமாயினும், மூவேந்தர்களின் பகைவன் மகள்களை மணந்தால், அழித்து விடுவார்கள் என்ற அச்சத்தால் மறுத்து விட்டனர். இதனால் மனமொடிந்த கபிலர், மூவேந்தருக்கும் சமமாக, மதிக்கக் கூடிய மன்னன் ஒருவன் உண்டா? என எண்ணினார்.

மன்னன் மலையமான் திருமுடிக்காரி ஞாபகம் வரவே, திருக்கோவலூரை நோக்கிச் சென்றார். மலையமான் திருமுடிக்காரி ஏக பத்தினி விரதம் உடையவன் என்பதைத் தானே பாடியிருந்தமையால், மலையமான் தன் மகன்களுக்குக்காவது மணமுடிப்-பான் என்ற நம்பிக்கையில், அந்தணர் என்போர் அறவோர் என நினைந்து, 'பார்ப்பாரிடம்' அடைக்கலமாகப் பெண்களை விடுத்து, அவர்களை வாழ வைக்க, சீர் சிறப்பைச் செய்ய வேண்டிப் பொருள் நாடி, சேரமன்னன் செல்வக் கடுங்கோ வழியாதனைக் காணச் சென்றார். இச்சேரமன்னன் பாரியுடன் முற்றுகைப் போர் நடத்திய-வன் அல்லன்.

இதனிடையே கடையெழு வள்ளல்களில் ஒருவனும், பெருங்-கல் நாடனுமான வையாவிக் கோப்பெரும் பேகனால் துறக்கப் பட்ட, அவன் மனைவி கண்ணகிக்காக, பேகனை வேண்டிப் பாடினார். பின்னர் அகுதை, வல்வில் ஓரி, நள்ளி இவர்களைப் பாடிச் சேரநாடு சென்றார். அங்குச் சேரமான் மாந்தரஞ் சேரலிரும்பொறையைப் பாடினார். இம்மன்னன் பாரியுடன் முற்றுகைப் போர் புரிந்தவன் அல்லன். அங்கயே ஆரிய மன்னன் பிரமதத்தனுக்குத் தமிழின் மேன்மை தெரிய வேண்டிக் 'குறிஞ்சிப் பாட்டைப்' பாடினார்.

அதன்பின்னர் சேரமன்னன் செல்வகடுங்கோ வாழியாதனைப் பதிற்றுப்பத்தின் தலைவனாக வைத்துப் பாடியதற்கு 'நன்று' என்ற குன்றின் மீதேறிக் கண்ணிற்குத் தெரிந்த பரப்பினை அளித்ததுடன், நூறுயிரம் கானம் கொடுத்து மகிழ்ந்தான்,

தனது ஆருயிர் நண்பர் வேள்பாரியின் மகள்கள் மணக் காலம் நெருங்கவும், வேள்பாரியின் பிரிவாற்றுமை மிகவும் வருத்தவே, தன் கடமையை நிறைவேற்ற வேண்டி, மலைய மானாட்டு திருக்கோவலூருக்கு மீண்டார். அங்கவை, சங்கவையைக் கண்டபின், தனது நண்பர் வேள்பாரியின் பிரிவுத்துன்பம் பன்மடங்கு அதிகமாகவே, வேள்பாரியை இழந்தும், அவன் மகளிர் பொருட்டு, இதுவரை தான் வாழ்ந்ததை எண்ணி மிகவும் வருந்தினர். தாம் எண்ணியுள்ள கடமை நிறைவேறும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை வேரூன்றவே தென்பெண்ணையாற்றின் வீரட்டேசுவரர் ஆலயத்தின் அருகில் உள்ள பெரிய கல்லில் வடக்கிருந்து, 'கலை யுணக் கிழிந்த முழவு மருள் பெரும்பழம்' என்ற புறம் 236 ஆம் பாடலில் நட்பின் பண்பை நிலைநிறுத்தி பாடி, அமரர் ஆனர்.

அப்படிப் பட்ட கபிலர்-பாரி நட்பின் நினைவுக்கல்லைப் பற்றி தெரிந்துக் கொள்வது இன்றியமையாகிறது.

> ''முத்தெறியும் பெண்ணை முதுநீரது தவிர்ந்து
> தத்திய நெய்யாறலைப் பெய்து — குத்திச்
> செருமலை தெய்வீகன் றிருக்கோ வலூர்க்கு
> வருமள வுங்கொண் டோடிவா.''

> ''பொன்மாரி பெய்யுமூர் பூம்பகுத்தி யாடையா
> மத்தாள் வயலரிசி யாகுமூ — ரெந்நாளுந்
> தேங்குபுக ழேபடைத்த சேதிமா நாடதனி
> லோங்குந் திருக்கோ வலூர்''

என்று ஔவையாரால் சிறப்பிக்கப்பட்ட தென்பெண்ணை -யாற்றின் தென்கரையில் திருக்கோவலூரின் கீழூர் என்ற கீழையூர் சிவன் கோயிலை அடுத்தாற்போன்று, பாறையின் மேல் ஒரு பெரிய கல் இரு ஊசி முனையில் நிற்பது போன்று அனைவரும் காணலாம். இதன்மேல் செங்கல் கட்டுமான கோபுரமும், கீழிருந்து மேலே செல்ல, குறுகலான படிக்கட்டும் கட்டப்பட்டு காட்சி அளிக்கும். இதைக் கபிலக்கல் என்று கல்வெட்டு கூறுகிறது. இலக்கியச்சான்றோர்கள் அவ்வண்ணமே அழைக்கின்றனர்.

ஆனால் பொதுமக்கள் இதனை 'எடைச்சிக் கூண்டு' என்றழைப்பார்கள். 'இடைச்சிக்கூண்டு' என்பது 'எடைச்சிக் கூண்டு' என்று மருவியதாகும். அல்லது 'இடைச்சி குன்று' என்பது 'எடைச்சி கூண்டாகி' இருக்கும். இதனைக் குன்று என்று சொல்லி -விடமுடியாது. ஆனால் ஒரு பெரிய கல் என்பதை ஒப்புக்கொள்வார்கள். இப்பொழுதும் இடைச்சி கல் என்றழைக்கப் பெறுவதில்லை. கல்லின் மேலுள்ள செங்கல் கோபுர தளம் ஓர் இடைச்சியால் கட்டப்பட்டு, அவ் -வண்ணம் அழைத்தார்கள் என்பது விளங்கிக்கொள்ள முடிகிறது. அதன் காரணமாக ஓர் கர்ண பாரம்பரை கதை வழங்குவதுண்டு.

தென்பெண்ணை நதியின் குறுக்கே சாத்தனூர் அணை கட்டுவதற்கு முன் இந்நதி காட்டாருக இருந்த படியால், 'வெண்ணெய் உருகும் முன்பே பெண்ணைப் பெருகும்' என்பதற்கேற்ப, இடையர் குலமகள் ஒருத்தி,

தயிர்க்குடம் தாங்கி, ஆற்றைக்கடக்கும் முன் வெள்ளம் கட்டுக்கு மீறியபடியால், இந்தக் கல்லில் அடைக்கலம் புகுந்தாள். வெள்ளம் வடிந்து ஊர் மீண்ட அவள், இந்தக் கல்லின் மேல் செங்கல்லால் சுவரும், கோபுர -மும் அமைத்துக் கூண்டு போன்ற கோயில் எழுப்பித் -தாள். இந்த அடிப்படையில் கபிலக் கல்லானது இடைச்சி கூண்டாகி, கபிலக்கல் பெயர் மறைந்து, வழங்கப் பெருமல் போயிற்று.

சிவதர்மப்படி, இறந்தவர்களின் சமாதியில்தான் சிறியலிங்கம் வைப்பது வழக்கம். அதுபோல் இன்றும் ஓர் சிறியலிங்கம் உள்ளது. இதை மனதிற் கொண்டு, முன்பு கூறப்பட்ட கபிலர் வடக்கிருந்து உயிர் துறந்தச் செய்தியை ஒன்றி நோக்குங் காலத்து, சமாதியடைந்த கபிலரின் ஞாபகார்த்தக்கல்தான் இந்தக் கபிலக் கல். உண்மையில் இக்கல் நட்பின் பண்பாய் திகழும் நினைவுக்கல்.

மேலும் இதனை மெய்ப்பிப்பதற்கு பிற்கால சோழர்களின் இராசராச சோழன் காலக் கல்வெட் -டொன்று, (South India inscriptions vol. VIII No. 863) சான்று கூறுகிறது.

**'வண்கரையிற் பொருது வருபுனற் பெண்ணைத்**
**தென்கரை யுள்ளது தீர்த்தத் துறையது**
**மொய்வைத் தியலும் முத்தமிழ் நாணமைத்**
**தெய்வக் கவிதை செஞ்சொற் கபிலன்**

முரிவன் டடக்கைப் பாரிதன் அடைக்கலப்
பெண்ணை மலையர்க் குதவிப் பெண்ணை
அலைபுன லழவத் தந்தாரி கஷஞ்செல
மினல்புகும் விசும்பின் வீடுபே றெண்ணிக்
கனல்புகுங் கபிலக் கல்லது,''

மேற்கண்ட கல்வெட்டு பாடலால் கபிலர் பாரி-யிடம் அடைக்கலமாய்ப் பெற்ற பாரியின் மகளிர்களை, மலையமான்கள் எனப்படும் மலையர்க்கு உதவி புரிந்து, அதாவது திருமணம் செய்வித்த, கபிலரோடு தொடர்-புடைய இக்கபிலக் கல், அவர் பெயரால் வழங்கிற்று என்பது நன்கு புலனுகிறது.

கபிலர் பிறப்பைப்பற்றி கருத்து வேறுபாடு உண்டு. அவர் வாழ்க்கை நிகழ்ச்சிகளை முறைப்படுத்தி கூறியதில் வேறுபாடு இருக்கலாம், ஆனுல் செய்திகள் உண்மை. கருத்துக்கள் உண்மை. கபிலர் பாரி மக-ளிரைப் 'பார்ப்பார்க்கு' மணமுடிக்கவில்லை என்பது முற்றிலும் உண்மை இந்த விஞவிற்கு எள்ளளவும் இடம் கிடையாது.

ஆனுல் எல்லா அறிஞர் பெருமக்களாலும் ஒருங்கே ஏற்றுக் கொண்ட உண்மை கபிலர், மலைய மானுட்டு திருக்கோவலூரின் தென்பெண்ணையாற்றில் உள்ள கபிலக் கல்லில் சமாதி ஆனுர் என்பதாகும்.

பிற்கால கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கு சமாதி உள்ள இடம், நாட்டரசன் கோட்டை என்ருல் முற்கா-லக் கவிசக்கரவர்த்தி கபிலனுக்கு சமாதி உள்ள இடம் திருக்கோவலூர் கபிலக் கல்லாகும். தமிழன்னைக்கு முடி சூட்டிய தலைமகன் கபிலருக்கு, அன்பு காணிக்கைச் செலுத்திட

வாரீர்! வாரீர்!!

கபிலர் தமிழுக்கு அளித்த பாடல்கள் :

**நற்றிணை-20** **புறநானூறு-30**
**குறுந்தொகை-29** **குறிஞ்சிப்பாட்டு-1**
**கலித்தொகை-29** **நெட்டிலை என்பது-1**
**ஐங்குறுநாறு-100** **திருவள்ளுவமாலை-1**
**பதிற்றுபத்து-10** **இன்னநாற்பது-41**
**அகநானூறு-16**

கபிலருடைய பாக்களில் சிறந்து காணப்படுபவை நட்பு, வண்மை, நன்றி மறவாமை முதலிய அரியப் பண்புகளாகும்.

சரித்திரச் செய்திகள்

**கோவல் பெரிய கோபுரத்தின் வயது :**

*கி. பி. 1058* **ஆம் ஆண்டு திருக்கோவலூர் திருமால் கோயிலை கற்றளியாக எடுப்பித்தாண்டு. ஆகவே பெரிய கோபுரத்தின் வயது காலம்** *922* **ஆண்டுகள். கோயிலை கற்றளியாக எடுப்பித்த அரசன் மிலாடுடையான் நரசிங்க வர்மன்** - II (S. I. I. vol. VII No. 19K *பக். 145-146* )

**சிவன் கோயில் மடைப்பள்ளி கட்டிய காலம்:**

*கி. பி. 1137* **ஆம் ஆண்டு மலையமானுட்டு மன்னன் விக்கிரம சோழ சேதிராயனின் மனைவி சிவன் கோயிலில் மடைப்பள்ளி கட்டினுள்.** (S. I. I. vol. VII No. 914)

## கபிலரின் குறிஞ்சிக் கலியில் ஓர் காட்சி!

'கற்றறிந்தார் ஏத்தும் கலி' என்னும் புகழ்பெற்றது கலித்தொகை. இத்தொகை நூல் எட்டுத்தொகை என்னும் சங்க இலக்கிய நூல்களில் ஒன்றாகும். கலித்தொகை குறிஞ்சிக்கலி, முல்லைக்கலி, மருதக்கலி, நெய்தற்கலி, பாலைக்கலி என்ற ஐந்து பிரிவுகளை உடையது. ஒவ்வொரு பிரிவிலும் அந்தந்த நிலத்திற்கேற்ற வருணையும், நிமித்தமும், தலைவன், தலைவி இவர்களது அன்பு வாழ்க்கையையும் கவிதை நயத்துடன் கூறும் ஒப்பற்ற அகத்துறை நூலாகும்.

மலையும், மலை சார்ந்த இடமும் குறிஞ்சி ஆகும். இக்குறிஞ்சிக் கலி இருபத்தொன்பது பாடல்களைக் கொண்டது. இதனைப் பாடிய கபிலப் பெருமான் தீட்டிய இன்ப ஓவியக் குவியலிலே இதோ ஒரு காட்சி.

வருணனைத் திறனுக்கு எட்டாத வனப்புடைய ஒரு தலைவி. அவள்பால் காதல் கொள்கிறான் ஒரு தலைவன். பின் இருவர் உள்ளங்களும் செம்புலப் பெயல்நீர் போல ஒன்றாகி விடுகின்றன.

முதல்நாள் தன் தலைவியைத் தேடி இரவு நேரத்தில் வருகின்றான். ஊர்க்காவல் கடுமையாக இருந்தபடியால் திரும்பி விடுகிறான். இரண்டாம் நாள் வருகின்றான். நாய்கள் குரைத்தமையால் திரும்பிவிடுகிறான். மூன்றாம் நாள் வருகின்றான். ஊர்க்காவல் தொல்லை, நாய்கள் தொல்லை இல்லை. ஆனால் அன்றோ, தலைவியின் தாய் உறங்காமல் விழித்திருக்கிறாள். இவ்வாறு மனம் துவண்டும் முயற்சியைக் கைவிட்டானில்லை.

நான்காம் நாள் வருகின்றான். வெண்ணிலவுப் பெண்ணரசி முழுமுகம் காட்டி நின்றாள். இந்த விண்மதியின் ஒளியில் தலைவி வருவதுதான் எங்ஙனம்? வெண்பனியைத் தூவிக்கொண்டிருந்த வெந்நிலவு பெண்ணரசி வெம்மையை உமிழும் உதயவனைக் கண்டு வெஃகி சபித்தபின், சென்றுவிட்டான்.

ஐந்தாம் நாளும் வருகின்றான். விண்ணரசி கொலு வீற்றிருக்கவில்லை. சுந்தரத் தாரகைகள் கண்சிமிட்டிக் கொண்டிருந்தார்கள். தலைவியின் தாயும் அயர்ந்து விட்டாள். இதுவே தக்க தருணம் என்று எண்ணித், தன் வருகையைத் தலைவிக்குத் தெரியப்படுத்த நொச்சிப் பூ ஒன்றைப் பறித்து தரையில் போட்டான். நொச்சி மலர் விழும் சத்தம் கேட்டு தலைவி வெளியே வரவேண்டும். இது அவர்களின் முன்னேற்பாடு.

தன் உளம் கவர்ந்த தலைவியின் வரவுக்காக இமைக்கவும் மறந்தான் தலைவன். அவளோ வரவில்லை. ஏன்?

சற்று முன்பு நொச்சி மலர் ஒன்று விழுந்த சத்தம் கேட்டு தலைவி வெளியே வந்தாள். அப்போது தலைவன் அங்கே இல்லை. காரணம் காற்றில் அசைந்து விழுந்தது அம்மலர். எனவே ஏங்கிய இதயம் ஏமாற்றப் பட்டுவிட்டது. அது போலவே இப்பொழுதும் விழுகின்றது என்று தலைவன் மலரைப் போட்ட போழ்து அலட்சிய-மாக இருந்துவிட்டாள். காத்திருந்த தலைவனும் திரும்பிவிட்டான்.

இவ்வாறு தலைவன் பட்ட பாடெல்லாம் தலைவிக்குத் தெரியுமா? தலைவன் வரக்காணோமே என்று எதிர்பார்த்து ஒவ்வொரு தினமும் விழித்திருந்தாள். எப்போது நொச்சி மலர்- விழும் என்று எதிர்பார்த்துக் காதுகளைக் கூர்மையாக வைத்துக்கொண்டி-ருந்தாள். நொச்சி மலர் விழ்ந்தும், அவள் உள்ளத்தை உற்சா-கப்படுத்தவில்லை. தலைவன் மேல் கோபம் கொண்டாள்,

தோழி தலைவனைக் கண்டு தலைவியின் வருத்தத்தைத் தெரிவிக்கின்றாள்.

"கலந்த நோய் கைம்மிக கண்படா என்வயின்
புலந்தாயும் நீ ஆயின் பொய்யான வெல்குவை
இலங்குதாழ் அருவியோடு அணிகொண்ட நின்மலைச்
சிலம்பு போல் கூறுவ கூறும்.
இலங்கு ஏர் எவ்வனை இவளுடைய நோயே!"

(குறிஞ்சி - 46)

விட்டக் கல்வி விளங்கவும்
தொட்டக் கல்வி துலங்கவும்

நாடிடுவீர்.

ராசி தனிப்பயிற்சி நிறுவனம்.
திருக்கோவலூர்.

மலர்விழி மின் அச்சகம், நெய்வேலி-2.